தண்டி யாத்திரை தொட்டு பூமிதான யாத்திரை வரை

Regd. No. M 6207

கிராமோதயம்

CONNEMARA PUBLIC LIBRARY
3-JAN 1956
MADRAS

ஆசிரியர்: ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - மே 1 * 1954 * விலை 1 அணு இதழ் 13

உண்மை வெல்லும்!!

"When all its work is done, the lie shall rot;
The truth is great and shall prevail,
When none cares whether it prevails or not."

[அதன் வேலை எல்லாம் முடிந்த பின்னர் பொய்மை அழியும். சத்தியம் வெல்கிறதா இல்லையா என்பதைப்பற்றி யாரும் கவலைப்படாதிருக்கும் பொழுது சத்தியம் வெல்லும்!!!

உலகின் சமீபகால சரித்திரத்தில் மேற்கூறிய அழகிய பாடலின் கருத்து எத்தனைமுறை ஞாபகத்திற்கு வந்திருக்கும் என்று கூறுவதற்கில்லை. கடைசியாக இப்பொழுது புதுச்சேரி போன்ற, இந்தியாவிலிருக்கும் பிரஞ்சு திட்டு பிரதேசங்களில் நடந்துவரும் இணைப்பு இயக்கம், கோவா போன்ற போர்த்துகீசிய திட்டு பிரதேசத்தில் நடைபெறும் அட்டூழியங்களும் போராட்டமும், இந்தியா வழியாக இந்தோ-சீனுவுக்கு அமெரிக்க துருப்புகளை ஏற்றிச்செல்லும் ஆகாய விமானங்களை பறக்க அனுமதிக்காமல் நமது அரசாங்கம் தடைசெய்ததும், அதை பாகிஸ்தானும், சிலோனும் அனுமதித்ததும், திருவாங்கூர் கொச்சியில் பிரஜா சோஷலிஸ்டு சர்க்கார் தோன்றியதும், போன்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்த பாடல்தான் நமக்கு ஆறுதலளித்து வருகிறது.] — ஆசிரியர்

சர்வோதயபுரி கடிதங்களிலிருந்து.

(1) கிராமாபிவிருத்தி வேலைகள்.

"தேசாபிவிருத்திக்காக செய்யப்படும் முயற்சிகளையும், கிராமாபிவிருத்தி வேலைகளையும் வெவ்வேருக பிரிக்க முடியாது. அன்பும், சகோதரத்வமும் நிறைந்த மனோ நிலையை கிராம ஜனங்களிடையே தோற்றுவித்தால்தான் கிராமாபிவிருத்தி வேலைகள் நடைபெறமுடியும். சுரண்டலற்ற ஒரு சமுதாயத்தைப் பற்றிய என்னுடைய கற்பனையாதெனில், அதிலுள்ள எல்லா குடும்பங்களின் வாழ்க்கைத்தரமும் ஒரே சம நிலையானதாக இருப்பதேயாகும்."

"முற்றிலும் ஆட்சியோ, சட்டமோ இல்லாத ஒரு சமூகத்தை என்னுல் கற்பனை செய்யமுடியவில்லை. கிராம ஜனங்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு சங்கங்களை அமைத்து தமது விவகாரங்களை தாங்களே சமாளித்துக்கொள்ளலாம்."

"பூமிதான யக்ஞத்திற்கு பிறகு கிராமங்களில் நடைபெறவேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்காக கிராமந்தோறும் ஒரு கமிட்டி அமைக்கப்படவேண்டும். [தமிழ்நாட்டில் கிராமோதய கதர் சங்கங்கள் அமைத்திருப்பது இந்த நோக்கத்துடன் தான்—ஆசிரியர்.] இந்த கமிட்டி கிராமத்திலுள்ள அனைவருக்கும் வேலை கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். உணவு இதர வாழ்க்கைத் தேவைகளின் உற்பத்தியை அதிகரிப்பதும், ஆதாரக் கல்விமுறையை ஆரம்பித்து, நடத்துவது முதலிய வேலைகளும் இக்கமிட்டிகள் செய்து வரும்."

— ஆர். கே. பாடில்,
(அபிவிருத்தி மந்திரி, மத்தியபிரதேச சர்க்கார்.)

(2) புரட்சியை நோக்கி.

"இன்று நடைபெற்றுவரும் பூமிதான யக்ஞ இயக்கத்தால் ஒரு புது சமுதாயத்தை தோற்றுவிக்கவோ, விரிவான ஒரு புரட்சியை ஏற்படுத்தவோ முடியாது! பரிபூரண புரட்சி வேண்டுமானுல் காந்தியடிகளின் நிர்மாண திட்ட வேலைகள் அனைத்தையும் அமுல் நடத்துவது அவசியம்.

சட்டமியற்றுவதும், அரசாட்சி செய்வதும் வாழ்க்கையின் சில பகுதிகளேயாகையால் அவைகளை மறந்து விடுவதோ, அலட்சியம் செய்வதோ சாத்தியமில்லை. "அரசியல், ஊழல் நிறைந்ததாயிருந்தாலும், அதுவும் வாழ்க்கையின் அம்சமேயாதலால் புறக்கணிப்பதற்கில்லை." என்று காந்தியடிகளே கூறிவந்தார்.

சமூகத்தை சீர்திருத்துவது 5 கோடி ஏக்கர் நிலத்தைசேகரித்து அதை நிலமில்லாதோரிடையே பங்கீடு செய்வதால் மட்டும் சாத்தியமாகிவிடாது. அறியாமையில் உழன்றுவரும் மக்களுக்கு "புது வாழ்வின்" சில மதிப்பீடுகள் தெரியவேண்டும். அதை அவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

பூமிதான யக்ஞ இயக்கம் வெற்றிபெற சர்க்கார் இயந்திரத்தையே கட்டுப்படுத்தி நமது திட்டங்களை அது நிறைவேற்றும்படி செய்யவேண்டும்.

பூமிதான யக்ஞத்திற்காக ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் தனது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்துள்ளதாகக் கேள்விப்பட்டு நான் மிகுந்த சந்தோஷமடைகிறேன். நானும் அவ்விதம் செய்ய முடிந்தால் மிகவும் நல்லது. ஆனுல் நான் கோபத்தை இன்னமும் வெல்லமுடியவில்லையாதலால் இயக்கத்தையே பாழாக்கக்கூடுமாதலால் தான், என் வாழ்க்கையை இதற்கர்க அர்ப்பணம் செய்ய இயலாமலிருக்கிறேன்.

— ஆச்சாரிய ஜே. பி. கிருபளானி.

(3) தொண்டர்களுக்கிடையே மனவேற்றுமை.

"சமூகத்திற்காக வேலை செய்யும்பொழுது தொண்டர்கள் தனது சொந்த நலனுக்காக எவ்வித நன்மையும் தேடிக்கொள்ளக்கூடாது."

"நிர்மாண திட்ட ஊழியர்கள் ஒருவரை ஒருவர் சந்தேகித்து பரஸ்பரம் விரோதிகளாகவும், கெட்டெண்ணத்தோடும் கருதி வருவதாக கேள்விப்பட்டு நான் மிகவும் வருந்துகிறேன்,"

— ஆச்சாரிய ஸ்ரீ விநோபாஜி.

3-JAN 1956
MADRAS

கிராமோதயம்

மே 1 1954

தண்டி யாத்திரை தொட்டு பூமிதான யாத்திரை வரை

குருட்டுக் கிழவன் தவம்

80 வயதுவந்த ஒரு கிழவன் இருந்தான். பஞ்சத்திலடிபட்ட குருட்டுக் கிழவன்! அவன் அனுபவிக்கவேண்டிய துன்பங்கள் ஏதும் பாக்கியில்லை. இருப்பினும் மனம் கெடவில்லை. கடவுளை வணங்கி வந்தான். கஷ்டத்திலடிபட்ட மனிதனின் குரலில் வேதனையின் பலம் தென்படுகிறது. தனது வாழ்க்கையிலிருக்கும் மீதி பலம் முழுதையும் ஈடுபடுத்தி கடவுளை வணங்குகிறுன். இந்தக் குருடன் வருடக் கணக்காக கடவுளை வணங்கிவந்தான்.

கருணைக்கடலான பகவான் சந்தோஷித்து குருடனுக்கு முன் தோன்றினுர். "நான் உன்னிடம் சந்தோஷப்படுகிறேன். உனக்கு வேண்டிய வரம் கேள்" என்று கூறினுர்.

ஒரே வரத்தில் யாவும் கிடைத்தது

கிழவன் மிகவும் விழித்திருந்தான். ஏமாறவில்லை. ஒரு நிமிடம் சிந்தித்து வரம் கேட்டான். "இறைவா! தங்கள் கிருபையால், எனது பேரப்பிள்ளை, தங்கத்தினுல் செய்த பேஸினில் ஸ்நானம் செய்வதைப் பார்க்கவேண்டும். இதற்கு நீ அருள் புரிவாயாக!"

பகவான் அவனுக்கு கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மனதில் கிழவனின் சாமர்த்தியத்தைப் பற்றி மெச்சிக்கொண்டே அங்கிருந்து மறைந்தார்.

மேலே, "கிழவன் விழித்திருந்தான்" என்று கூறப்பட்டதின் பொருள் அவன் ஒரே வரத்தால் அனைத்தையும் கேட்டுவிட்டான் என்பதே.

முதலாவதாக நீண்ட ஆயுளைக் கோரிவிட்டான். 80 வயது கிழவன் பல்லாண்டுகள் உயிர் வாழாவிடில் அவனுக்கு மகனும், பேரனும் எப்படி ஏற்பட முடியும்?

இரண்டாவதாக ஆரோக்கியத்தையும், ஐசுவரியத்தையும் கோரிவிட்டான். ஐசுவரியம் இல்லாவிட்டால் அவன் பேரன் எப்படி தங்க பேஸினில் ஸ்நானம் செய்ய முடியும்?

மூன்ருவதாக தான் இழந்த கண்களையும் திரும்பக் கோரிவிட்டான். இல்லாவிடில் அவன் எப்படி தனது பேரன் குளிப்பதைப் பார்க்க முடியும்?

யுகபுருஷர்கள்

கடவுள் சத்தர்ப்பத்திற்கேற்றவாறு உருவம் கொண்டு அவதரிக்கும்பொழுது ஒரு முறை ஒரே வரம்தான் கொடுப்பதாக வாக்களிக்கிறுர். ஒரு முறைதோன்றி இரண்டு வரம் கோர விடுவதில்லை. ஆனுல் சமூகத்தில், ஒரே வரத்தினுல் யாவற்றையும் அடையக்கூடிய ஒரு வரம் கோருகின்ற, ஒன்றிரு சிந்தனைச்சீலர்கள் இருக்கின்றனர். இவர்களை "யுக புருஷர்கள்" அல்லது யுகபிரவர்த்தகர் என்று சொல்லப்படுகிறுர்கள்.

அவர்கள் காலத்தின் கோரிக்கைகளை அறிந்து தங்கள் சமூகத்தின் தேவைகளையும் நன்கு அறிவார்கள். ஆகையால் அவர்களுக்கு வரம் கேட்கும் புத்திசக்தி இருக்கிறது.

காந்தியடிகளின் சிறப்பு

இந்த யுகத்தின் மகாபுருஷர்களில் யாவரினும் காந்தியடிகள் பெரியவர். அவர் இன்னல்களை நீக்குவதற்கு, கையாண்ட முறைகள் உலகப் பெரியார்களை ஆச்சரியத்திலாழ்த்திவிட்டது. உலக சரித்திரத்தில் சத்தியாக்கிரக இயக்கமானது உலகிற்கே ஒரு புதுமை. இதற்கு இணை பண்டையகாலச் சரித்திரத்திலும் காணப்படவில்லை; வேறு தேசங்களிலும் காணப்படவில்லை; நமது தேசத்திலும் காணப்படவில்லை.

இரு சாராரிடமும் அன்புமயமாக இருப்பதும் இருவருக்குமிடையே கேடு விளைவிப்பதுமான ஒரு உபாயம், காந்தியடிகளுக்கு முன்னர் உலகிற்குத் தெரியவே தெரியாது. ஆனுல் உலகம் அதை எதிர்பார்த்திருந்தது. ஆகையால் காந்தியடிகள் தண்டி யாத்திரை துடங்கியபொழுது, அதன் எதிரொலி உலகெங்கும் மின்சாரம்போல் பாய்ந்தது.

உப்பு சத்தியாக்கிரகம்

உப்புவரி சட்டத்தை உடைத்ததினுல் மட்டும் பெரிய காரியம் ஏதும் சாதித்துவிட முடியாது. பிறதேசங்களில் இந்தப் பிரச்னையே கிடையாது. ஆனுல் தண்டி யாத்திரையின் புதுமையையும், பெருமையையும் புரியாதவர்கள் உலகெங்குமிருக்கவில்லை. இந்த செய்தியைக் கேட்டமாத்திரத்தில் பாமர மக்களிலும், பாமரர்கூட புரிந்துகொண்டுவிட்டார்கள்.

அதிகாரத்தையும், செல்வத்தையும் உதறித் தள்ளி பொறுக்கியெடுத்த சில தோழர்களுடன் காந்தியடிகள் கால்நடை யாத்திரை ஆரம்பித்தார்.

ரெயில்கள், மோட்டார்கள், ஆகாய விமானங்கள் நிறைந்த இந்த உலகில் இது ஒரு புதுமை! ஆரம்பத்தில் மக்கள் ஒன்றும் புரியாமல் ஊசலாடினுர்கள். மெதுவாக மக்கள், அநியாயத்தை எதிர்ப்பதற்கு பாரத தேசத்தில் ஒரு புது ஆயுதம் தயாராகிவருகிறது என்று உணர்ந்தார்கள்.

பூமிதானம்: வழி-முகாம் அல்ல.

விநேபாஜி அதே வழியில்தான் முன்னேறுகிறுர். வழி அதுவே; ஆனுல் இடம் அதில்லை. காந்தியடிகள் நம்மை எதுவரை கொண்டுவந்து சேர்த்தாரோ அதே இடத்தில் நாம் நின்றுவிடுவோமாணுல் வழி, வழியாகாது; வழியே முகாமாகிவிடும்!

வழி நிற்பதற்காக அமைவதில்லை. முன்னேறிச் செல்வதற்காக ஏற்பட்டது, காந்தியடிகளின் வழிதான். அதில் முன்னேறிச் செல்லும் தைரியமும், புத்திசக்தியையும் பூதான யக்ஞத்தை தலைமை தாங்கி நடத்திவரும் ஸ்ரீ விநேபாஜி காட்டிவருகிறுர்.

மூன்று லக்ஷியங்கள்

தண்டி யாத்திரை மூலம் காந்தியடிகள் மூன்று விஷயங்களை அடைந்தார்:

(1) ஆங்கில சர்க்காரின் நியாய வாதம் பொய்யானது என்பதை நிரூபணம் செய்யப்பட்டது.

(2) ஆயுதம், செல்வம், படிப்பு இவை யாவும் இல்லாதவர்களுக்கும் "தன்முயற்சி" ("புருஷார்த்தம்") என்ற பாதையை வகுத்துக் கொடுத்தார்.

(3) பொய்மை, தந்திரம், சூதுவாதுகள், அடிதடி ஒன்றும் இல்லாமல் தீங்கை எதிர்ப்பது சாத்தியம் என்பதை தெளிவாக்கினுர்.

அஹிம்சா ராணுவம்

இம்மூன்று படிப்பினைகளும் உலகிற்குக் கிடைத்தது. சட்டமறுப்பு அவர் ஒண்டியாகச் செய்யவில்லை. தனது உற்ற நண்பர்கள், தோழர்களுடன் சமூக ரீதியில் செய்தார். ராணுவமில்லை. அணிவகுப்பு இல்லை. ராணுவக்கட்டுப்பாடுகளும் இல்லை. தளபதியின் பயமும் இல்லை. இப்படி

3 - JAN 1956

யிருந்தும் அவருடைய தோழர்களிடையே கட்டுப்பாடிருந்தது.

வினோபாவின் பெருமை

வினோபாவின் பூமிதான யக்ஞ இயக்கத்திலும் இதே மூன்று பெருமைகள் பிரதிபலிக்கின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அது ஒரு சாதாரண இயக்கமாகத் தோன்றக்கூடும். ஆனால் வினோபாஜி இதன்மூலம் மூன்று லட்சியங்களை அடைய விரும்புகிறார்.

(1) சமூகத்தின் தற்கால அமைப்பை மாற்றியமைப்பது.

(2) விஞ்ஞானம் மனித சமூகத்தை எந்த எல்லை வரை முன்னேற்றிச் செல்லக்கூடுமோ அதற்கப்பால் மனிதனை முன்னேற்றிச் செல்வது.

(3) மனிதன் மனதையே மாற்றிவிடுவது.

மேலே முதலில் கூறிய குருடன் கேட்ட வரத்தில் என்ன பெருமை இருந்ததோ, அதே போல் தண்டி யாத்திரையிலும் இன்று பூமிதான யக்ஞ இயக்கத்திலும் பெருமை பொதிந்திருக்கின்றன!

— தாதா தர்மாதிகாரி.

ஆறாவது சர்வோதய சம்மேளனம்—கயா.

கயா.

மக்களுக்கு வழிகாட்டும் தலைவர்களும், சேவை செய்யும் தொண்டர்களும் அடங்கிய ஒரு திருக்கூட்டமாக சென்ற ஏப்ரல் 18, 19, 20 தேதிகளில் கயாவில் கூடிய சர்வோதய சம்மேளனம் தென்பட்டது.

"சமன்வய ஆசிரமம்"

பாபு ராஜேந்திர பிரசாதும், உப ஜனாதிபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணனும், பிரதமர் நேருஜியும், மற்றும் மத்திய,மாகாண அரசாங்க மந்திரிகள், கவர்னர்கள், ஆச்சாரிய ஜே. பி. கிருபளானி, ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் போன்ற தலைவர்கள் தேசத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வந்து கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் கலந்தாலோசித்தனர். சத்தியத்தையும், அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு புது சமூக அமைப்பை தோற்றுவிக்கும் இம் முயற்சிக்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பு இயற்கையாகவே ஸ்ரீ வினோபாஜியின்மீது இருக்கிறது. அவர் இந்த வழியில் உலகத்தின் வெவ்வேறு மத போதனைகளையும், சமூக கோட்பாடுகளையும் ஆராய்ந்து ஐக்யப்படுத்தி அனுஷ்டிப்பதற்காக புத்த பெருமான் ஞானமெய்திய இடத்தில் தனது "சமன்வயாசிரமத்தை" ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார். அங்கு ஒரு கிணறு பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களால் வெட்ட துடங்கப்பட்டது.

ஆத்ம சக்தி வெல்லும்.

இம்மாதிரி வினோபாஜி நமது நடைமுறைப் பிரச்னைகளை தீர்க்க அஹிம்சை வழிகளை பின்பற்றுகிறார். பூமிதான யக்ஞம் அவருடைய ஆத்ம சக்தியையும், திட நம்பிக்கையையும் பிரதிபலிப்பது போல், காரியசித்தியையும் வெளிப்படுத்துகிறது.

பூமிதான யக்ஞம்

ஸ்ரீ ஜவஹர்லால் நேரு கூட பூமிதான யக்ஞத்தின் புரட்சிகரமான அடிப்படையை பாராட்டி அந்த அடிப்படையை சர்க்கார் உதவி பாதிக்கக் கூடும் என்று அஞ்சுகிறார். இந்த இயக்கம் பூமிதானம் கொடுப்போரையும், பெறுபவர்களையும், தொண்டர்களையும் மேன்மைப்படுத்துகிறது என்பதுடன் நிலப் பிரச்னையை தீர்க்கவும் உதவுகிறது. ஸ்ரீ வினோபாஜி இந்த இயக்கத்தை அரசியல் கட்சி பூசல்களுக்கப்பாற் பட்டதாகவே வைத்துக் கொள்ள முயற்சி செய்கிறார். உத்திர பிரதேசம், பீஹார், ஒரிஸ்ஸா போன்ற பல ராஜ்யங்களில் அநேகம் கிராமங்கள் தமது நிலமனைத்தையும் தானமாக கொடுத்துள்ளன. நாளது வரை சுமார் 3 லக்ஷம் கொடையாளர்களிடமிருந்து சுமார் 30 லக்ஷம் ஏக்கர் நிலம் தானமாக கிடைத்திருக்கிறது. இதில் பெரும்பகுதி சுமார் 18 லக்ஷம் ஏக்கர் நிலம் பீஹாரிலிருந்து மட்டும் கிடைத்திருக்கிறது. சுமார் 7500 நிலமில்லாத குடும்பத்தினருக்கு புதிதாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலோர் ஹரிஜனங்கள்.

பேதங்கள் நீங்க.

ஆச்சார்ய ஸ்ரீ வினோபாஜி சமூக சீர்திருத்தங்களையும் சரி, நில சீர்திருத்தங்களையும் சரி, மக்களிடையே ஒரு நெருக்கடி மனோபாவத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தீர்க்க வேண்டுமென்று விரும்பவில்லை. அவர் இந்த சீர்திருத்தங்களை எதிர்ப்பவர்களையும் நிதானப் படுத்தி, அவர்கள் மனதையும் மாற்றவேண்டுமென்று விரும்புகிறார். அவர் ஜாதி, மத, நாடு, நிற பேதங்களனைத்தும் அழிய வேண்டுமென்று விரும்புகிறார். ஏன் ஸ்ரீ வினோபாவும் சரி, ஸ்ரீ நேருவும் சரி இன்று சமூக வாழ்வில் சில பகுதிகளையாவது தேர்தல்களிலிருந்தும் அதன் பயனாக ஏற்படும் தலைகீழ் கொந்தளிப்புகளிலிருந்தும் காப்பாற்றுவது நலம் என்று கூட எண்ணுகிறார்கள்.

பலரை சுரண்டுவது நிற்கவேண்டும்.

பலரை சிலர் சுரண்டுவதை தடுத்தாலன்றி லக்ஷிய ரீதியான பொதுவுடமை ஏற்படுவது அசாத்தியம். இந்த சுரண்டலை தடுப்பதற்கு அஹிம்சா ரீதியில் செய்யப்படும் முயற்சிகளே பயனளிக்கும் என்பதற்கு காந்தியடிகளின் வாழ்க்கை சரித்திரமும், நமது தேச சமீபகால சரித்திரமும் சான்றாகும்.

நிர்மாண வேலைகள்

பூமிதானமும், மற்ற எல்லா நிர்மாண திட்ட வேலைகளும், ஆதிக்க மனோபாவத்தை மாற்றி, சமத்துவம், ஒற்றுமை, தார்மீக மனோபாவமுள்ள ஒரு ஒன்றுபட்ட சமூகம் இவைகளை தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வாழ்க்கை அர்ப்பணம்.

கயா சம்மேளனத்தில் பல நிர்மாண திட்ட ஊழியர்களும், பிரமுகர்களும் சர்வோதய லக்ஷியத்திற்காக தமது ஆயுட்காலத்தையே அர்ப்பணம் செய்தனர். ஒரு அமெரிக்க பெண்மணி கூட தனது தேசத்தில் அடிமைப்படுத்தி, அடக்கி ஆளப்பட்டு வரும் நீக்ரோ வகுப்பினரிடையே சர்வோதய வேலைகள் செய்வதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள்.

— ஸி. துரைராஜன்.

சென்னை, ஆந்திர ராஜ்யங்களின் சில விவசாய விவரங்கள்.

		சென்னை.	ஆந்திரம்.
1.	பூகோள ரீதியில் விஸ்தீர்ணம் ஏக்கர்	3.86 கோடி	4.07 கோடி
2.	ஜனத்தொகை	3.57 ,,	2.05 ,,
3.	காடுகள் (ஏக்கர்)	.60 ,,	.80 ,,
4.	மொத்த நிலப்பரப்பில் காடுகளின் சதவிகிதம்	16%	20%
5.	சாகுபடி செய்யப்படும் நிலம் (ஏக்கர்)	1.49 ,,	1.55 ,,
6.	இருபோகம் சாகுபடி நிலம் (ஏக்கர்)	.25 ,,	.20 ,,

— ஏ. நடராஜன்.

3 - JAN 1956

கண்மூடித்தனமான இயந்திர வளர்ச்சியே நமது இன்றைய இன்னல்களுக்குக் காரணம்.

[26-4-'54 தேதி மாலே டில்லி மேல்சபையில் இந்திய சர்க்கார் வரவு செலவு திட்டத்தின்மீது நடந்த விவாதத்திற்கு பதிலளிக்கையில் நமது நிதி மந்திரி ஸ்ரீ ஸி. தேஷ்முக் சில உண்மைகளை பகிரங்கமாக ஒப்புக்கொண்டார், அவைகளை வாசகர்களும், எல்லா சர்வோதய வாதிகளும் கவனிப்பது அவசியம் என்று கருதி கீழே தரப்பட்டிருக்கிறது.) — ஆசிரியர்.

வேலையில்லாத் திண்டாட்டமும், பண வீக்கமும்

வேலையில்லாத் திண்டாட்டத்தை பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதும், வரவுக்கு மேல் செலவு செய்யாமல் பணவீக்கத்தைத் தடை செய்வதும் ஏககாலத்தில் செய்வது சாத்தியமில்லை. ஏதாவதொன்று இருந்துதான் தீரவேண்டும். சம்பூரண வேலையை நெருங்க நெருங்க பணவீக்கத்தின் விளைவுகளும் அதிகரித்து வரும். ஆகையால் வரவுக்குமேல் செலவு செய்யும் நிர்ப்பந்தம் குறைந்து கொண்டே வரும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது ஒரு நீண்டகாலத் திட்டம். வரிகள் மூலம் ரூ. 10 கோடி வருமானம் இருக்கும்பொழுது ரூ. 250 கோடி செலவழித்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறையாதா?

கண்மூடித்தனமான இயந்திர மோகம்

சென்ற 50 ஆண்டுகளில் நமது தேசத்தில் கண்மூடித்தனமாக இயந்திரத் தொழில்களைப் புகுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மை. நமக்கு சாத்தியமாக இருந்திருந்தால் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இதற்கு வேறு நடவடிக்கை எடுத்திருக்கலாம். நன்கு ஆராய்ந்த பின்னர் ஒருக்கால் நமது இயந்திர தொழில் வளர்ச்சி காரணமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்திருக்கிறது என்று கூறுவதும் சரியாக இருக்கும். சென்ற பல்லாண்டுகளாகத் தேங்கிக் கிடக்கும் வேலையில்லாத் திண்டாட்டம்தான் இன்று நாடெங்கும் தென்படுகிறது என்றும் கூறலாம்.

நீண்டகாலத் திட்டம்

இந்த பிரச்னையை நாம் கவனத்தில் கொண்ட பொழுதிலும் இதை தீர்ப்பதற்கு குறுக்கு வழிகள் கிடையாது. சிறு குடிசைத் தொழில்களையும், கிராமக் கைத்தொழில்களையும் வளர்ப்பதைப்பற்றி நாம் சிந்தித்து கவனம் செலுத்தவேண்டும்.

அன்று செய்ததன் வினை

சென்ற சில வருடங்களில் மூலதனம் இருப்பவர்கள் கண்மூடித்தனமாக இயந்திரங்களை இறக்குமதி செய்து 10,000 பேர்கள் வேலை செய்வதை 1,000 பேர்கள் செய்யத்தக்கவாறு ஆக்கிவிட்டார்கள். அன்று இம்மாதிரி செய்ததன்பயனாக தேசத்தின் பொருளாதாரம் எவ்விதம் பாதிக்கப்படுகிறது என்பதை கவனிப்பதற்கே ஆள் இல்லை. அன்று தனி நபர்கள் நடத்தும் தொழில் துறையில் தலையிடுவதற்கு எவர்க்கும் அதிகாரமில்லை. தேசம் சுதந்திரமடைந்த பிறகு இந்தக் குறைகளைத் தீர்க்க பொது இனங்கள் இருக்கின்றன.

அபிவிருத்தி வேலைகள்

தேச விடுதலைக்குமுன் அபிவிருத்தி வேலைக்காக நம்பிக்கையுடன் செலவிடுவது வழக்கமல்ல. ஆகையால் யார் நினைத்தாலும் ஏதாவது ஒரு தொழிலில் தலையிட்டு, அதை இயந்திர மயமாக்கி அதில் வேலை செய்துவந்தவர்களை வேலை இழக்கச் செய்வது சாத்தியமாக இருந்தது. ஆகையால் நாம் அறியாமலேயே நமது வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை வளர்த்துவிட்டோம்.

மூன்றும் வழி

நாம் அதே தவறை மீண்டும் செய்யக்கூடாது. நான், கிராமக் கைத்தொழில்களும், கிராம சுய தேவை பூர்த்தியும் என்ற தீவிர கட்சியையும் ஆதரிக்கவில்லை. வெகுவேகமாக தேசத்தை இயந்திர மயமாக்கும் அதி தீவிரவாதத்தையும் ஆதரிக்கவில்லை. நான், சீனர்களைப்போல ஒரு விஷயத்திற்கு ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று பக்கங்கள் இருப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன். நான் இந்த மூன்றுவது வழியில் நம்பியிருக்கிறேன்.

— ஸி. தேஷ்முக்,
மத்திய அரசாங்க நிதி மந்திரி.

ஸ்ரீ விநோபாவுக்கு தண்ணீரில் நீந்துவதைக் காட்டிலும் அதிகம் முழுகத் தெரியும்!!!

பூஜ்ய விநோபாஜியை ஒரு நாள் தனது நெருங்கிய நண்பர்களில் ஒருவர் அணுகி தங்களுக்கு தண்ணீரில் நீந்துவதற்குத் தெரியுமா என்று வினவினர்.

அதற்கு பதில் கூறுகையில், "எனக்கு நீந்துவதற்கு தெரியும்; ஆனால் அதைக்காட்டிலும் அதிகம் முழுகுவதற்குத்தான் தெரியும்" என்று ஸ்ரீ விநோபாஜி பதிலளித்தார். இதன் பொருள் என்ன என்று அவருக்கு விளங்கவில்லை. அதை விளக்கி மற்றொரு நண்பர் கூறிய விளக்கம் இது.

"சபர்மதி ஆசிரமத்தில் காந்தியடிகளுடன் ஸ்ரீ விநோபாஜியும் தங்கியிருந்தகாலம். ஒரு நாள் விநோபாஜி சபர்மதி ஆற்றில் நீந்துவதை பார்த்தேன். அவர் அணிந்திருக்கும் மூக்குக் கண்ணாடி மிகவும் சக்திவாய்ந்தது. கனமானது. அதில் தண்ணீர் துளிகள் பட்டுவிட்டால் பார்வை முற்றிலும் குன்றிவிடும். அவ்வாறே பார்வை குன்றியதால் சபர்மதியாற்றில் கரைதெரியாமல் விநோபாஜி அடித்து சென்றுகொண்டிருந்தார். தெய்வாதீனமாக, அடித்துச் செல்லும்பொழுது கரை தட்டியதால் அவர் முழுகவில்லை. இல்லையாயின் அன்று அவர் முழுகியே இருப்பார்!"

— கி. கா.

(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

இந்த இதழில்

"உண்மை வெல்லும்" 57
சர்வோதயபுரி கடிதங்களிலிருந்து 57
தண்டியாத்திரை தொட்டு — பூமிதான யாத்திரை வரை 58
ஆறுவது சர்வோதய சம்மேளனம் — கயா 59
சென்னை — ஆந்திர ராஜ்யங்களின், சில விவசாய விவரங்கள் 59
கண்மூடித்தனமான இயந்திரத் தொழில் வளர்ச்சியே நமது இன்றைய இன்னல்களுக்குக் காரணம் 60
விநோபாவுக்கு தண்ணீரில் நீந்துவதைக்காட்டிலும், அதிகம் முழுகத்தெரியும்!!! 60

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.